# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க,
## வேலையாளர்களின் குறைந்தபட்ச
## ஓய்வுபெறும் வயதுச் சட்டம்

---

*(2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2021, நவெம்பர் மாதம் 19 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 27.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க,**
**வேலையாளர்களின் குறைந்தபட்ச**
**ஓய்வுபெறும் வயதுச் சட்டம்**

[*2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஓ. 27/2021*

**தொழில்தருநரொருவர் எந்த குறைந்தபட்ச வயதில் எவரேனும் வேலையாளரை ஓய்வுபெறச் செய்யலாமோ அந்த குறைந்த பட்ச வயதுக்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானவொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது

குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது

**2.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின், சேவை ஒப்பந்த மொன்றின், கூட்டு உடன்படிக்கையொன்றின் அல்லது சேவை ஒப்பந்தத்தின் வேறேதேனும் வடிவத்தின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியில் ஐம்பத்திரெண்டு வயதை அடையாதுள்ள அல்லது இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்குப் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப் படுகின்ற வேலையாளரொருவரின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது அத்தகைய வேலையாளர் (இதனகத்துப்பின்னர் “குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறுபது வயதை அடைவதன் மேலானதாக இருத்தல் வேண்டும் :

ஆயின், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று ஐம்பத்தி ரெண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதை அடைந்துள்ள வேலை யாளரொருவரின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது, அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டவாறான வயதாகவிருக்குமெனக் கருதப் படுதல் வேண்டும்.

முன்கூட்டிய ஓய்வுபெறுதல்

3. (1) பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்துகின்ற தொழில்தருநரெவரும், அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட வேலையாட்களையும் மற்றும் வேலையின் தன்மையைக் கருத்திற்கொண்டு காலத்துக்காலம் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான ஏதேனும் வியாபாரத்தில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் ஈடுபடும் எவரேனும் வேலையாளரையும் தவிர்ந்த எவரேனும் வேலையாளரை அத்தகைய வேலையாளர் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதை அடைகின்றவரை, ஓய்வுபெறச் செய்தலாகாது:

ஆயின், எவரேனும் தொழில்தருநர் பின்வரும் ஏதுக்களின்மீது, சேவை ஒப்பந்தத்தின் அல்லது கூட்டு உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, எவரேனும் வேலையாளரை முன்கூட்டி ஓய்வுபெறச் செய்யலாம்:-

(அ) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் பதிவு செய்யப்பட்ட மருத்துவத்தொழிலர், ஒரு வேலையாளர் ஏதேனும் சுகவீனம் காரணமாக வேலையில் ஈடுபடுவதற்கு நிரந்தரமாக இயலாதவராகவுள்ளாரென சான்றுதிப்படுத்தியுள்ள விடத்து;

(ஆ) ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையின் விளைவாக ஒரு வேலையாளரின் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ள விடத்தும் அத்தகைய முடிவுறுத்துகைபற்றிய முடிபு சட்டத்தினால் மீளாய்வு செய்யப்பட்டிராதவிடத்தும்;

(இ) ஏதேனும் இயற்கைக் காரணத்தின் காரணமாக தாபனமொன்றின் மூடுகை அல்லது அழிவின்மேல்; அல்லது

(ஈ) 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், எவரேனும் வேலையாளரின் ஓய்வுக்கு முன்னரான பன்னிரெண்டு மாதங்களினுள் சராசரியாக பதினைந்து அல்லது அதற்குக் குறைந்த வேலையாளர்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள எவரேனும் தொழில்தருநருக்கு ஏற்புடையனவாதலாகாது.

(3) குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுக்கு முன்னர் தனது தொழிலை வறிதாக்க தானாக விரும்புகின்ற எவரேனும் வேலையாளர், தானாகவே அவ்வாறு செய்யலாம்.

*இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவுள்ள சேவை ஒப்பந்தம் முதலியவற்றின் காலம் வறிதாதல்*

**4**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் அல்லது அத்தேதியன்று அல்லது அத்தேதிக்குப் பின்னர் செய்து கொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ளப்படும் சேவை ஒப்பந்தம், கூட்டு உடன்படிக்கை அல்லது சேவை ஒப்பந்தத்தின் ஏதேனும் வடிவமொன்றில் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதைப் பார்க்கிலும் குறைவாக குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஓய்வுபெறும் வயது, 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வெற்றானதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது அது தொடர்பிலும் ஏற்புடைய தாதலும் வேண்டும்.

## பாகம் II

### முறைப்பாடுகளும் விசாரணைகளும்

*முன்கூட்டிய ஓய்வுக்கெதிராக ஆணையாளர் தலைமை யதிபதிக்கு முறைப்பாடு களைச் செய்தல்*

**5**. (1) மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறை தவிர்ந்த வேறுமுறையில் தொழில்தருநரினால் முன்கூட்டியே ஓய்வுபெறச் செய்யப்பட்டுள்ள எவரேனும் வேலையாளர், அத்தகைய ஓய்வுத் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், அத்தகைய ஓய்வு தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் முறை யிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் வேலையாளர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு முறைப்பாடொன்றைச் செய்துள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி விசாரணையொன்றை நடாத்தி அத்தகைய முறைப்பாட்டைப்பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அம்முறைப்பாட்டின் மீதான அவரது இறுதி முடிபை வழங்குதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான விசாரணையொன்றின்மேல், ஆணையாளர் தலைமையதிபதி-

(அ) வேலையாளரினால் செய்யப்பட்ட முறைப்பாடு ஆதரிக்கும் சான்றுகளினால் மெய்யுறுதிப்படுத்தவில்லையென அல்லது அத்தகைய முன்கூட்டிய ஓய்வு 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கவுள்ளதெனத் திருப்தியுற்றால், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய முறைப்பாட்டைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக வேலையாளர் அவரது தொழில்தருநரினால் முன்கூட்டியே ஓய்வுபெறச்செய்யப்பட்டுள்ளாரெனத் திருப்தியுற்றால், ஆணையாளர் தலைமையதிபதி, அவரினால் வழங்கப்பட்ட அறிவித்தல்மூலம் தொழில்தருநருக்கு பின்வருவதனைச் செய்யுமாறு பணித்தல் வேண்டும் :-

(i) அத்தகைய ஓய்வுக்கு முன்னர் அவ்வேலையாளர் எப்பதவியில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்தாரோ அப்பதவியில் அத்தகைய அறிவித்தல் தேதியிலிருந்து அவரை மீளப் பணியிலமர்த்துதலும் அத்தகைய ஓய்வுத்தேதியிலிருந்தான அவரது வேதனங்களையும் வேறெல்லா அனுகூலங்களையும் அவருக்கு வழங்குதலும்; அல்லது

(ii) தாபனம் மூடப்படுவதன் காரணமாக அல்லது அத்தகைய வேலையாளர் எந்தத் தாபனத்தில் தொழில் புரிந்தாரோ அந்தத் தாபனத்தை ஒடுக்கும் செயன்முறை தொடங்கப்படுவதன் காரணமாக மீளப்பணியமர்த்தல் நடைமுறைச் சாத்தியமற்றதென ஆணையாளர் தலைமை அதிபதி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, மீளப் பணியமர்த்தலுக்குப் பதிலாக, கடைசியாகச் செலுத்தப்பட்ட வேதனங்களை அடிப்படையாகக் கொண்டு 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல்

(சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 6ஈ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட சூத்திரத்தின் நியதிகளின் படியான நட்டஈட்டை விடயத்துக்கேற்ப, அத்தகைய தாபனத்தின் மூடுகைத் தேதிவரை அல்லது அத்தகைய தாபனத்தின் ஒடுக்குதல் தொடங்கத் தேதிவரை அத்தகைய வேலையாளருக்குச் செலுத்துதல்.

(4) எவரேனும் வேலையாளர், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் அல்லது 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் நியதிகளுக்கமைய, முன்கூட்டிய ஓய்வுபெறலுக்கெதிராக, ஆணையாளர் தலைமையதிபதிக்கு, தொழில் நியாயசபையொன்றுக்கு, நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்கு அல்லது கைத்தொழில் நீதிமன்றமொன்றுக்கு முறைப்பாடொன்றைச் செய்துள்ளவிடத்தும், அத்தகைய முறைப்பாடு மீதான இறுதி முடிபு ஆணையாளர் தலைமையதிபதியினால், தொழில் நியாயசபையினால், நடுத்தீர்ப்பாளரினால் அல்லது கைத்தொழில் நீதிமன்றத்தினால் ஆக்கப்படாதுள்ளவிடத்தும், ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை விசாரிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தலாகாது:

ஆயின் வேலையாளர், (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் அல்லது 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் நியதிகளுக்கமைய, முன்கூட்டிய ஓய்வு பெறலுக்கு எதிரான முறைப்பாடொன்றைச் செய்திருப்பின், அத்தகைய வேலையாளர் இச்சட்டத்தின்கீழான முறைப்பாடொன்றைச் செய்வதற்கு உரித்துடையவராதலாகாது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான விண்ணப்பம்

**6.** (1) ஐந்தாம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட முடிபொன்றுடன் திருப்தியுறாத எவரேனும் தொழில் தருநர், எழுத்தாணையொன்றின் தன்மையிலான கட்டளையொன்றை வழங்குவதற்காக, அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பத்தைச் செய்கின்ற தொழில்தருநர், அத்தகைய விண்ணப்பத்துக்கு அமைந்ததாகவுள்ள கட்டளை பின்வருவன வற்றுக்காகப் பணிக்கின்றவிடத்து, பணத்திலான பிணைப்பொறுப் பொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் :-

(அ) வேலையாளருக்கு பணத்தொகையொன்றை மாத்திரம் செலுத்தமாறு பணிக்கின்றவிடத்து, அத்தகைய பணத் தொகைக்குச் சமமான தொகையொன்று;

(ஆ) வேலையாளருக்கு பணத்தொகையொன்றைச் செலுத்து மாறும் அவரை மீளப் பணியிலமர்த்துமாறும் பணிக்கின்ற விடத்து, அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றும் மற்றும் அத்தகைய வேலையாளரின் சேவை ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட நேரத்தில் காணப்பட்ட அவரது மாதாந்தச் சம்பளத்தின் அல்லது வேதனங்களின் பன்னிரெண்டு மடங்கும். நாட்சம்பளம் செலுத்தப்படும் வேலையாளரொருவரின் விடயத்தில், மாதாந்தச் சம்பளம் அல்லது வேதனங்கள், அத்தகைய வேலையாளரின் நாளாந்த வேதனத்தின் இருபத்தாறு மடங்குகளாக இருத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றம், விண்ணப்பகாரர் பணத்திலான பிணைப்பொறுப்பொன்றைக் கொடுத்துதவியுள்ளாரெனப் பயனுறுத்துவதற்கான ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழொன்று இணைக்கப்படாது எழுத்தாணையொன்றின் தன்மையிலான கட்டளையொன்றை வழங்குவதற்கான விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவப்பட்ட எல்லா பணங்களையும் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் வட்டியைக் கொண்டுள்ள கணக்கொன்றில் வைப்பிலிடச் செய்வித்தல் வேண்டும். பிணைப்பொறுப்பானது, விடயத்துக்கேற்ப, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்மானத்தின் நியதிகளுக்கமைய இயைபான திறத்தவர்களுக்கு விடுவிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### சட்டத்தின் நிருவாகமும் தொழில் ஆணையாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும்

*சட்டத்தின் நிருவாகம்*

**7**. தொழில் ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அவருக்குள்ள எவையேனும் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை அவரினால் அதிகாரமளிக்கப் பட்டவாறான தொழில் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

*ஆணையாளர் தலைமை யதிபதியின் தத்துவங்கள்*

**8**. (1) ஆணையாளர் தலைமையதிபதி, 5 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட முறைப்பாடொன்று தொடர்பிலான ஏதேனும் விசாரணையின் நோக்கங்களுக்காக, மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சாட்சிகளுக்கு அழைப்பாணைவிடுத்தலும் அவர்களின் வருகையை கட்டாயப்படுத்துதலும்;

(ஆ) ஆவணங்களின் காண்பிப்பை கட்டாயப்படுத்துதல்; அல்லது

(இ) எவரேனும் சாட்சியின் சான்றானது சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது கொடுக்கப்படுவதனைத் தேவைப்படுத்துதல் அல்லது அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்கும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை

ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் எடுத்தோதப்படுவதனைச் செய்வித்தல்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி எவரேனும் தொழில்தருநருக்கு சேர்ப்பித்த எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறான தேதிக்கு முன்னர் அத்தொழில்தருநர் பின்வருவனவற்றை தனக்கு கொடுத்துதவுமாறு பணிக்கலாம் :-

(அ) அவரது எல்லா வேலையாட்கள் தொடர்பான விபரத் திரட்டொன்று அல்லது அத்தகைய வேலையாட்களின் வகுப்பு அல்லது விவரணம் மற்றும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தக்கூடியவாறான எவையேனும் விபரங்கள்;

(ஆ) அத்தகைய தொழில்தருநரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் குறிப்பிடப்பட்ட எவையேனும் விபரங்கள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய தகவல்கள் அல்லது விளக்கங்கள்; அல்லது

(இ) அத்தகைய தொழில்தருநரினால் பேணப்பட்ட ஏதேனும் இடாப்பு அல்லது பதிவேடு முழுவதினது அல்லது அதன் ஏதேனும் பாகத்தினது சான்றுப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகள்.

(3) (அ) ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அழைப்பாணைகளில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு முன்தோன்றுவதற்கு காரணமின்றி தவறுகின்ற;

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அவர்சார்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும்

அலுவலருக்கு முன் சாட்சியாளரொருவராக சத்தியஞ்செய்வதற்கு அல்லது உறுதிப்படுத்து வதற்கு மறுக்கின்ற;

(இ) உள்நுழைவதற்கு அல்லது சோதனையிடுவதற்கு அல்லது ஆணையாளர் தலைமையதிபதி அவரது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமான வாறாக அவரினால் தேவைப்படுத்தப்பட்ட உதவியை வழங்க மறுக்கின்ற;

(ஈ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது இடையூறு விளைவிக்கின்ற;

(உ) வேதனங்கள் பற்றிய ஏதேனும் இடாப்பை அல்லது பதிவேட்டைக் காண்பிக்க மறுக்கின்ற அல்லது ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் அவருக்குக் காண்பிக்குமாறு அல்லது கொடுக்குமாறு அவரினால் தேவைப் படுத்தப்படுகின்ற ஏதேனும் தகவலை கொடுக்க மறுக்கின்ற;

(ஊ) ஏதேனும் முக்கியமான விபரத்தில் பொய்யான தாகவுள்ள வேதனங்கள் பற்றியதுமான ஏதேனும் இடாப்பை அல்லது பதிவேட்டைத் தயாரிக்கின்ற அல்லது தயாரிக்கச் செய்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் இடாப்பு அல்லது பதிவேடு பொய்யானதாகவுள்ளதென அறிந்துகொண்டு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தின்கீழ் செயலாற்றி அவருக்கு அதனைக் காண்பிக்கின்ற அல்லது காண்பிக்கச் செய்கின்ற அல்லது அறிந்துகொண்டு அனுமதிக்கின்ற;

(எ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்படுகின்ற ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஏதேனும் தகவல் பொய்யான தாக இருப்பதாக அறிந்துகொண்டே, அவ்வேதே னும் தகவலை அவருக்குக் கொடுத்துதவுகின்ற; அல்லது

(ஏ) (i) ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில், காரணமின்றி அல்லது நியாயமற்றதாகவுள்ள காரணத்துடன் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஏதேனும் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு முன் தோன்றத்தவறுகின்ற;

(ii) ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் காரணமின்றி அல்லது நியாயமற்றதாகவுள்ள காரணத்துடன் அவரது உடைமையில் அல்லது தத்துவத்தி லுள்ள ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் ஆணையாளர் தலைமை யதிபதியினால் விசாரணை செய்யப்படு கின்ற கருமங்களின் உண்மையைக் கண்டறிவதற்கு அவசியமாகவுள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் காண்பிப்பதற்கும் காட்டுவதற்கும் மறுக்கின்ற அல்லது தவறு கின்ற;

(iii) ஆணையாளர் தலைமையதிபதியின்முன் சாட்சியொருவராக சத்தியஞ்செய்வதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு மறுக்கின்ற; அல்லது

(iv) ஆணையாளர் தலைமையதிபதியினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுவதில் தவறுகை புரிகின்ற, அல்லது விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவும்படி கோரப்படும்போது பொய்யான ஒரு விபரத்திரட்டை அல்லது ஏதேனும்பொய்யான கூற்றைக்கொண்டுள்ள ஒரு விபரத்திரட்டை அறிந்து கொண்டு தயாரிக்கின்ற அல்லது கொடுத்துதவுகின்ற அல்லது கொடுத்துதவச் செய்கின்ற,

ஒவ்வோராளும், இப்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரின் முன் நடாத்தப்படுகின்ற சுருக்க விசாரணையின் பின்னர் அதன்கண் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

*அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல்*

**9**. எவரேனுமாளுக்கு சேர்ப்பிக்கப்பட அல்லது கொடுக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் அறிவித்தலானது, அத்தகைய ஆளுக்கு தனிப்பட்ட முறையில் சேர்ப்பிக்கப்படாது அல்லது கொடுக்கப்படாது இருந்தால், அத்தகைய ஆள் தங்கியுள்ள அல்லது தொழில்புரிகின்ற அவரது வழமையான அல்லது இறுதியாக அறியப்பட்ட இடத்தின் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அவருக்கு அனுப்பிவைக்கப்படின், அத்தகைய அறிவித்தல் அத்தகைய ஆளுக்கு முறையாகச் சேர்ப்பிக்கப் பட்டுள்ளதாக அல்லது கொடுக்கப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

*ஒழுங்குவிதிகள்*

**10**. (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தினால்

எவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டின்மேல் அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியில் நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின்முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரமளிக்கப்படாத் தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர்செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### தவறுகளும் தண்டனைகளும்

முன்கூட்டி ஓய்வு பெறல்

**11.** மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் தொழில்தருநர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

*ஆணையாளர் தலைமையதிபதியின் பணிப்புக்களுக்கு இணங்கியொழுகாமை*

**12.** (1) ஐந்தாம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட பணிப்பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் தொழில்தருநர், தவறொன்றைப் புரிவதுடன், நீதிவானொருவரினால் நடாத்தப்படும் சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(2) ஐந்தாம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பணிப்புகளுக்கு தொழில்தருநர் இணங்கியொழுகியுள்ளார் என்பதை எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய தொழில்தருநரின் மீதானதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் தொழில்தருநரொருவருக்கு குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மேல், அத்தகைய தொழில்தருநர் பின்வருவன வற்றைச் செய்தல் வேண்டும் :-

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் அத்தகைய தொழில்தருநர் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள குற்றப்பணத்துக்கு மேலதிகமாக, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தகைய பணிப்புக்கு அவர் இணங்கியொழுகாது தொடர்ந்து தவறுகின்ற ஒவ்வொரு நாள் தொடர்பிலும் நூறு ரூபா மேலதிகமாக குற்றப்பணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்;

(ஆ) ஐந்தாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியில் தொடங்குகின்றதும் அத்தகைய தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியில் முடிவடைகின்றதுமான காலப்பகுதியொன் றுக்கு, அத்தகைய வேலையாளர் ஓய்வுபெறச் செய்யப்படாமல் தொழிலில் இருந்திருந்தால் அவருக்குச் செலுத்தப்படற்பாலனவாக இருந்திருக்கக்கூடிய 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) வின்கீழான வேதனங்கள், அனுகூலங்கள் அல்லது நட்டஈடுகளை அத்தகைய வேலையாளருக்குச் செலுத்துதல் வேண்டும்;

(இ) வேலையாளர், அத்தகைய தொழில்தருநர் குற்றத்தீர்ப் பளிக்கப்படும் தேதிக்கு முன்னர் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதை அடைகின்றவிடத்து, அவ்வேலை யாளர் எத்தேதியன்று குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதை அடைகின்றாரோ அத்தேதிவரை அவருக்கு வேதனங்கள், அனுகூலங்கள் அல்லது நட்டஈடுகளைச் செலுத்த வேண்டும்.

(4) தொழில்தருநரொருவர் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் செலுத்துவதற்குப் பொறுப்புடையவராகவுள்ள ஏதேனும் பணத்தொகையானது, எந்த நீதிமன்றத்தினால் அத்தகைய தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்த நீதிமன்றத்தினால் அவருக்கு விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணத்தைப் போன்று அத்தகைய நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்மூலம் அறவிடப்படலாம் என்பதுடன், அவ்வாறு அறவிடப்பட்ட தொகையானது வேலையாளருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்ட தவறுகள்*

**13**. இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்டுள்ளவிடத்து, அந்த நேரத்தில் -

(அ) அத்தகைய ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் ஒவ்வோர் அலுவலரும் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆட்கள் குழுவானது குழுமமொன்றாக இருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) அத்தகைய ஆட்கள் குழுவானது தொழிற்சங்கமொன்றாக இருப்பின், அத்தொழிற்சங்கத்தின் ஒவ்வோர் அலுவலரும் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அத்தகைய ஆட்கள் குழுவானது, ஒரு குழுமம் அல்லது தொழிற்சங்கம் தவிர்ந்த குழுவொன்றாகவும் மற்றும் கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவும் இருப்பின், அத்தகைய குழுவின் தலைவர், முகாமையாளர், செயலாளர் மற்றும் ஒவ்வோர் அலுவலரும் அத்தகைய தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஆளெவரும் இச்சட்டத்தின்கீழான தவறொன்று அவர் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தார் என அத்தகைய ஆள் எண்பித்தால், அத்தகைய ஆள் அத்தகைய தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

*ஆணையாளர் தலைமை யதிபதியை அவமதித்தல்*

**14.** எவரேனுமாள் -

(அ) இச்சட்டத்தின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணையின் போது ஆணையாளர் தலைமையதிபதியை இழிவுபடுத்துகின்ற அல்லது அச்சுறுத்துகின்றவிடத்து; அல்லது

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படும் சட்டமுறையான அத்தகைய விசாரணைச் செயன்முறையில் தலையீடு செய்கின்றவிடத்து,

அத்தகைய ஆள், ஆணையாளருக்கெதிரான அவமதிப்புத் தவறைப் புரிகின்றார்.

*இச்சட்டத்தின் கீழான தவறுகள் சுருக்க முறையாக விளங்கப்படும்*

**15.** இச்சட்டத்தின்கீழான தவறொவ்வொன்றும், வேலையாளர் கடைசியாக எந்த இடத்தில் தொழில்புரிகின்றாரோ அந்த இடத்துக்கான பிரிவில் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவானொருவரினால் சுருக்கமுறையாக விளங்கப்படத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

ஆணையாளர் தலைமை யதிபதியால் நடாத்தப்படும் விசாரணையின் நடவடிக்கை முறைகள் இயற்கை நீதிபற்றிய நெறிமுறை களுக்கு முரண்படா திருத்தல்

**16.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படும் ஏதேனும் விசாரணையிலான நடவடிக்கைமுறைகள் இயற்கை நீதி பற்றிய நெறிமுறைகளுடன் முரண்படாத ஏதேனும் முறையில் ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப் பட்ட ஆளொரு வருக்குக் கிடைக்கக் கூடிய தாகவுள்ள விசேட எதிர்வாதம்

**17.** (1) எவரேனும் தொழில்தருநர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படுமிடத்து, அத்தகைய தொழில்தருநர், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரினால் உரியமுறையில் செய்யப்பட்ட முறைப்பாட்டின்மேலும் மற்றும் அவரது உட்கருத்துப்பற்றி மூன்று நாட்களுக்குக் குறையாத அறிவித்தலை வழக்குத்தொடுநருக்குக் கொடுப்பதன்மீதும், உண்மையான தவறாளரென அவர் குற்றஞ்சாட்டுகின்ற வேறெவரேனுமாளை நீதிமன்றத்தின்முன்னர் கொணர்வதற்கு அச்சட்டத்தின் அத்தியாயம் XIV இன் ஏற்பாடுகளுக்கமைய உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வேறு ஆளினால் தவறானது புரியப்பட்டமை எண்பிக்கப்பட்டுள்ளபின்னர், தொழில்தருநர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை வலுவுறுத்துவதற்குத் தாம் உரிய விழிப்புக்கவனம் பிரயோகித்துள்ளாரென்றும் அத்தகைய வேறு ஆள் அவரது அறிவோ, சம்மதமோ அல்லது உட்கையோ இன்றி அத்தவறைப் புரிந்துள்ளாரென்றும் நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால், அப்போது, அத்தகைய வேறு ஆள் அத்தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் தொழில்தருநர் அத்தவறு தொடர்பிலான ஏதேனும் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில் தொழில்தருநரினால் வேறெவரேனுமாளுக்கெதிராக முறைப்பாடொன்று செய்யப்படுமிடத்து–

(அ) அத்தகைய வேறு ஆளுக்கெதிரான குற்றவழக்குத் தொடுப்பு தொழில்தருநரினால் அல்லது அவரின் சார்பில் நடாத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய வேறு ஆளுக்கெதிரான வழக்குநடவடிக்கைகளில் குற்றவழக்குத்தொடுநரினால் அழைக்கப்பட்ட எவரேனும் சாட்சி, ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் குறுக்குவிசாரணை செய்யப்படலாம்; அத்துடன்

(இ) அத்தகைய வேறு ஆளுக்கெதிரான வழக்குநடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும் வரை, தொழில்தருநரின் குற்றவழக்குத்தொடுப்பிலான வழக்குநடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படுதல் வேண்டும்.

**18.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய- பொருள்கோடல்

''ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது, தொழில் ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும் என்பதுடன், எவரேனும் மேலதிகத் தொழில் ஆணையாளர் தலைமையதிபதியையும், தொழில் ஆணையாளரையும், பிரதித் தொழில் ஆணையாளரையும், ஓர் உதவித் தொழில் ஆணையாளரையும் அல்லது எவரேனும் தொழில் அலுவலரையும் உள்ளடக்கும்;

''தொழில்தருநர்'' என்பது, எவரேனும் வேலையாளரைத் தொழிலுக்கமர்த்துகின்ற அல்லது வேறெவரேனும் ஆளின் சார்பில் எவரேனும் வேலையாளரைத் தொழிலுக்கமர்த்தச் செய்கின்ற எவரேனுமாள் என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய குழு ஒரு குழுமமாக, கம்பெனியாக, கூட்டுத்தாபனமாக, தொழிற்சங்கமாக அல்லது ஒரு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக இருந்தாலுஞ்சரி, ஆனால் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டிலிருந்து

அல்லது இச்சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியிலிருந்து தவிர்க்கப்படுகின்ற அரசை அல்லது அரசாங்கத்தை அல்லது அத்தகைய வேறு ஆளை அல்லது அத்தகைய குழுவை உள்ளடக்காது;

''அமய தன்மையினதான தொழில்'' என்பது, ஏதேனுமொரு பஞ்சாங்க ஆண்டில் நூற்றியெண்பது நாட்களை விஞ்சாதுள்ள வேலையாளரொருவரின் தொழில் என்று பொருளாகும்;

''நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கான தொழில்'' என்பது, ஒரு தொழில்தருநருக்கும் ஒரு வேலையாளருக்கும் இடையே நாட்களில், மாதங்களில் அல்லது ஆண்டுகளில் குறித்துரைக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கான எழுத்திலானவொரு தொழில் ஒப்பந்தம் என்று பொருளாகும் என்பதுடன், ஏலவேயுள்ள நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கான தொழில் ஒப்பந்தத்துக்கு ஒத்ததாகவுள்ள காலநீட்சிக்கு நீடித்துள்ளதெனக் கருதப்படவேண்டியதாக, அத்தகைய ஒப்பந்தம் குறிப்பிட்டவொரு பணியின் அல்லது கருத்திட்டத்தின் புரிகையுடன் குறிப்பாக இணைந்துள்ளவிடத்தும் மற்றும் பன்னிரெண்டு பஞ்சாங்க மாதங்களுக்கு மேற்பட்ட புதியவொரு தொழில் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளாமல் அத்தகைய நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கான ஒப்பந்தம் முடிவடைந்தபின்னர் அத்தகைய வேலையாளரின் சேவைகளைத் தொழில்தருநர் வைத்திருக்குமிடத்தும் அதே தனியாளுடன் செய்துகொள்ளப்பட்ட தொடர்ச்சியான நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கான ஒப்பந்தத்தையும் உள்ளடக்கும்;

''தகுதிகாண் நிலையிலுள்ள வேலையாளர்'' என்பது, 180 நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு வேலை செய்கின்ற வேலையாளரொருவர் என்று பொருளாகும்; அத்தகைய காலப்பகுதியினுள் தொழில்தருநர்,

குறிப்பிட்டவொரு பதவிக்கு அத்தகைய வேலையாளர் பொருத்தமானவராக உள்ளாராவென்பதை முடிபுசெய்வதற்குத் தனித்தற்றுணிபைக் கொண்டுள்ளார்; இல்லையெனின் அத்தகைய காலப்பகுதியை நூற்றியெண்பது நாட்களைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு நீடிப்பதற்கு முடிபு செய்யலாம்; அத்துடன் வேலையாளரொருவர் அதே பதவியில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்தால் அல்லது அத்தொழில்தருநருடன் ஏதேனும் சேவை ஒப்பந்தத்தின்மீது முன்னர் அதே வேலையைப் புரிந்திருந்தால் அத்தகைய வேலையாளரை உள்ளடக்காது;

''பருவகாலத் தொழில் ஒப்பந்தம்'' என்பது, குறித்துரைக்கப்பட்டவொரு பருவகால வேலை தொடர்பில் ஒரு தொழில்தருநருக்கும் ஒரு வேலையாளருக்கும் இடையேயான எழுத்திலான ஒரு தொழில் ஒப்பந்தத்தில் நாட்களில் அல்லது மாதங்களில் குறித்துரைக்கப்பட வேண்டியவொரு காலத்துக்கானதும் உள்ளபடியான அல்லது வேறு அடிப்படையின்மீது செய்துகொள்ளப் பட்டதும் ஒவ்வொரு பன்னிரெண்டு மாதகாலப் பகுதியிலும் ஈடுபடுத்துகைக் காலம் ஆறுமாதங்களை விஞ்சாதிருந்தால் திட்டவட்டமற்ற காலத்துக்கான ஒப்பந்தமெனக் கருதப்படாதிருக்க வேண்டியதுமான அத்தகைய ஒப்பந்தம் என்று பொருளாகும்;

''வேலையாளர்'' என்பது, (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தில், ''வேலையாளர்'' என்ற பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''வேதனங்கள்'' என்பது, அடிப்படைச் சம்பளம் அல்லது சம்பளமும் வாழ்க்கைச் செலவுப்படியும் அல்லது வேறேதேனும் ஒத்த படி என்று பொருளாகும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**19**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை I** *பிரிவு 2*

| வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டம் நடைமுறைக்குவரும் தேதியில் உள்ளவாறு வேலையாளரின் வயது | குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது |
|---|---|
| 54 அல்லது அதற்கு மேற்பட்டதும் 55 வயதிற்குட்பட்டதும் | 57 வயது |
| 53 அல்லது அதற்கு மேற்பட்டதும் 54 வயதிற்குட்பட்டதும் | 58 வயது |
| 52 அல்லது அதற்கு மேற்பட்டதும் 53 வயதிற்குட்பட்டதும் | 59 வயது |
| 52 வயதிற்குட்பட்ட | 60 வயது |

**அட்டவணை II** *பிரிவு 3 (1)*

1. பகிரங்க துறையிலுள்ள எவரேனும் வேலையாளர்.

2. எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்ட சபையிலுள்ள எவரேனும் வேலையாளர்.

3. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலுள்ள எவரேனும் வேலையாளர்.

4. ஏதேனும் மாகாணசபையில் அல்லது உள்ளூரதிகாரசபையில் உள்ள எவரேனும் வேலையாளர்.

5. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தினால் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட எவரேனும் வேலையாளர்.

6. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 68 ஆம் பிரிவினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள அறக்கட்டளை நிறுவனமொன்றின் எவரேனும் வேலையாளர்.

7. ஏதேனும் வியாபாரத்தில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் பயிற்சிக்கான ஏதேனும் சேவை ஒப்பந்தத்தைச் செய்துள்ள எவரேனும் வேலையாளர்.

8. (136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சம்பளச் சபையிலுள்ள எவரேனும் தொழில்பயிலுனர் அல்லது பயிலுனர்.

9. 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தினால் அல்லது 1978 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, பயிலுனர்களின் தொழில் (தனியார்துறைச்) சட்டத்தினால் உள்வாங்கப்படுகின்ற எவரேனும் தொழில் பயிலுனர் அல்லது பயிலுனர்.

10. நிலையான காலப்பகுதிக்கான தொழில் ஒப்பந்தமொன்றின்கீழ் அல்லது அமையநிலைத் தொழில் ஒப்பந்தமொன்றின்கீழான ஒப்பந்தமொன்றைச் செய்து தொழில் புரிகின்ற எவரேனும் வேலையாளர்.

11. தொழில்தருநரொருவருக்கு நிலையான காலப்பகுதிக்கான தொழில் ஒப்பந்தமொன்றைச் செய்து அதன்கீழ் தொழில்புரிகின்ற எவரேனும் வேலையாளர்.

12. தொழில்தருநரொருவருடன் பருவகாலத் தொழில் ஒப்பந்தமொன்றைச் செய்து அதன்கீழ் தொழில்புரிகின்ற எவரேனும் வேலையாளர்.

13. தொழில்தருநரொருவருடன் சேவை ஒப்பந்தமொன்றைச் செய்கின்ற எவரேனும் பகுதிநேர வேலையாளர்.

14. தொழில்தருநரொருவருடன் சேவை ஒப்பந்தமொன்றைச் செய்கின்ற எவரேனும் தகுதிகாண் நிலையிலுள்ள வேலையாளர்.

15. அமையநிலைத் தன்மையிலான தொழில் ஒன்றில் ஈடுபடுகின்ற எவரேனும் நாட்சம்பளம்பெறும் வேலையாளர்.

16. கற்கை விடுமுறையின்போது ஒரு தற்காலிகக் காலப்பகுதிக்கான தொழில் ஒப்பந்தமொன்றின்கீழ் சேவையாற்றுகின்ற எவரேனும் மாணவர்.

17. எவரேனும் வீட்டு வேலையாளர்.

18. தொழில்தருநருடன் செய்யப்பட்ட, ஒப்படை அடிப்படையிலான தொழில் ஒப்பந்தமொன்றின்கீழ் சேவையாற்றுகின்ற எவரேனும் வேலையாளர்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*